விடியல் The Dawn

மாத இதழ்

பொழுது - 37
ஏப்ரல் 2012

# கவிதை சிறப்பிதழ்



ந.பிச்சமூர்த்தி



மீரா



மு.மேத்தா

# விடியல்

## The Dawn

*மாத இதழ், பொழுது – 36*
*ஏப்ரல், 2012*

*சிறப்பாசிரியர்*
**முனைவர் நா. கண்ணன்**
கல்லூரி முதல்வர்

*ஆசிரியர்*
**முனைவர் மா. கார்த்திகேயன்**
தமிழ்த்துறைத் தலைவர்

*இணை ஆசிரியர்*
**முனைவர் ப. சரவணன்**
தமிழ் விரிவுரையாளர்

*ஆசிரியர் குழு*
தமிழ் விரிவுரையாளர்கள்
அனைவரும்

*வெளியீடு:*

KSR COLLEGE OF ARTS AND SCIENCE INDIA

**தமிழ்த்துறை**
**கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரி**
**(தன்னாட்சி)**
**திருச்செங்கோடு – 637 215**
**நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.**
**vidiyalmagazhine@gmail.com**
**ksrcasthamizh.blogspot.com, ksrcas.edu**

# உள்ளடக்கம்

**புதுக்கவிதை முன்னோடிகள்**

*ந. பிச்சமூர்த்தி* 02,
*மீரா* 07,
*மு. மேத்தா* 14

**கவிதைகள்**

**முப்பத்து ஐந்து**

**சங்கச் சாரல் - 02**

*நெருஞ்சி மலர்* 18

**சரித்திரக் கட்டுரை - 04**

*செஞ்சிக்கோட்டை* 22

*மாணவக்கவிஞர்களை ஊக்கப் படுத்தும் வகையில் இந்த மாத ‘விடியல் இதழ்’ கவிதைச் சிறப்பிதழாக வெளிவருகின்றது. இச் சிறப்பிதழுக்காக கவிதைகளைப் படைத்தளித்த அனைத்து மாணாக் கர்களுக்கும் நன்றியையும் வாழ்த்து களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.*

**பின் அட்டை ஓவியம்**

**சௌந்தர்யா,**
இரண்டாமாண்டு துகிலியல் மற்றும் ஆடை வடிவமைப்புத்துறை

*புதுக்கவிதை முன்னோடிகள் - 01*

# ந. பிச்சமூர்த்தி

தமிழ்ப் புதுக்கவிதையின் தந்தை என்று அழைக்கப்படுபவர் ந. பிச்சமூர்த்தி.

கும்பகோணத்தில் வாழ்ந்த நடேச தீக்ஷிதர் - காமாட்சி யம்மாள் தம்பதியருக்கு நான் காவது குழந்தையாக நவம்பர் 8, 1900இல் ந. பிச்சமூர்த்தி பிறந்தார். அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் வேங்கட மகாலிங்கம்.


இவருக்கு முன் பிறந்த மூன்று குழந்தைகளில் இரண்டு குழந்தை கள் இறந்துவிட்டன. அற்பமான பெயர்களைக் கொண்டு அழைத்து வந்தால் காலன் அவர்களை அழைத்துச் செல்ல மாட்டான் என்ற நம்பிக் கையில் இவரை 'பிச்சை' என்று அழைத்தனர். பின்னாளில் பிச்சை, பிச்சமூர்த்தி ஆனார். நடேச தீக்ஷிதர் தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு மற்றும் மராட்டி மொழிகளில் ஹரிகதா கலாட்சேபம் செய்யுமளவிற்குத் தேர்ச்சி பெற்றவர். சைவப் புராணப் பிரசங்கங்கள் செய்தவர்.

பிச்சமூர்த்தி கும்ப கோணத் தில் தன் பள்ளிப் படிப்பையும் கல்லூரிப் படிப்பையும் முடித் தார். தத்துவத்தில் பட்டம் பெற்று, சென்னை சட்டக் கல்லூரியிலும் பட்டம் பெற்றார். 1925 முதல் 1938 வரை வழக்கறிஞராகப் பணிபுரிந்தார். 1939 முதல் 1959 வரை இந்து அறநிலையத்துறை அதிகாரியாகப் பணிபுரிந்தார்.

பின்னர் இவர், 'நவஇந்தியா பத்திரிகையில் சிறிது காலம் பணியில் இருந்தார். இவரின் எழுத்துக்கள் சுதேசமித்திரன், சுதந்திரச் சங்கு, தினமணி, மணிக்கொடி போன்ற பத்திரிகைகளில் வெளி வந்தன.

தத்துவ மரபில் வாழ்ந்து வந்த செழுமையின் உள்தூண்டல் அவரது படைப்பு மனோபாவத்தின் அடிநாதமாக இழையோடியது. 'இலக்கியமும் நம்மைப் போல நம்மையறியாமலே - ஒருவேளை நம்மையும் மீறி - உந்தித் தள்ளும் சக்தி அல்லது எதுவோ...' என நம்பினார். இந்த நம்பிக்கையின் சோதனை

முயற்சிகளாகவே பிச்சமூர்த்தியின் படைப்புகள் வெளிப்பட்டன.



பிச்சமூர்த்தி, ஸ்ரீராமானுஜர் என்னும் திரைப்படத்தில் ஆளவந்தார் வேடமேற்று நடித்திருக்கிறார்.

பிச்சமூர்த்தி இயல்பிலேயே ஆன்மீக விஷயங்களிலும், துறவிலும் நாட்டம் கொண்டவராக இருந்திருக்கிறார். குடும்ப வாழ்க்கையில் அடியெடுத்து வைத்த பின்னரும் ஓர் ஆண்டு காலம் குடும்பத்தை விட்டுப் பிரிந்து சந்நியாசத்தை விரும்பி ஊர் ஊராக அலைந்திருக்கிறார்.

தன்னைத் துறவியாக்க வேண்டி, தனக்கு உபதேசம் செய்யுமாறு ரமண மகரிஷியிடமும் சித்தர் குழந்தைசாமியிடமும் அணுகினார். ஆனால் அவர்கள் இவருக்கு இல்லற வாழ்க்கை தான் பொருத்த மானதென்று உபதேசித்தனர். இவர் டிசம்பர் 4, 1976 இல் மறைந்தார்.

இவரது கவிதைகளைத் தொகுத்து 2000இல் சாகித்திய அக்காதெமி நூலாக வெளி யிட்டுள்ளது.

**ந. பிச்சமூர்த்தியின் ஒரு கவிதை**

## பிரார்த்தனை

**"வானகம் செல்லும் வண்ணம்**
**கூரையில் புறாவைப்போல்**
**கானக மன நெருக்கில்**
**உழலாமல் விண் எய்ததாலே...**
**பித்தனெனப் பேரைப் பெற்றேன்**
**பித்தனாயிருக்க அருள்வாய்**
**பித்தரே பித்தர் குருவே."**

**(மணிக்கொடி - 20.01.935)**

## நண்பா!

**கு.பாபு,**
*முதலாண்டு வேதியியல்*

"அவளைப் பார்த்தபின் என் நீண்டநாள்
நண்பனை மறந்தேன்.
சாலைவிபத்தில் அடிபட்டு G.H. இல் நான்.
நான் அழைக்காமலேயே நண்பன் வந்தான் -
தன் இரத்தம் கொடுத்தான். நான்
பலமுறை அழைத்தபின் அவள் வந்தாள் -
காகிதப் பூக்கள் கொடுத்தாள்."

# கல்வி

**வே. பூங்கொடி,**
*முதலாண்டு வேதியியல்*

*"ஆடிப்பாடி விளையாடுவது*
*என்று இருந்தேன் அன்று.*
*எழுத்துகள், எண்கள்*
*என்று அறிந்தேன் நேற்று.*
*எழுதுவது படிப்பது*
*என்று தெளிந்தேன் இன்று.*
*இதைத் தந்தது எதுவோ*
*என்று நினைப்பேன் நாளை.*
*அதுதான் கல்வி என்று*
*அறிவேன் முழுவாழ்வில்."*

# அடையாளம்

**எம். பவித்ரா,**
*இரண்டாமாண்டு துகிலியல் மற்றும்*
*ஆடைவடிவமைப்புத்துறை*

*"நீ பிறக்கும்போது*
*உன் தாய் அழுதால் அது*
*உன்னால் அவள்கொண்ட*
*ஆனந்தத்தின் அடையாளம்.*
*நீ இறக்கும்போது*
*உலகம் அழுதால் அது*
*நீ வாழ்ந்த சிறந்த*
*வாழ்வின் அடையாளம்."*

# சுற்றுச்சூழல்

**எஸ். குணசீலன்,**
*இரண்டாமாண்டு நுண்ணுயிரியியல்*

*"அருவிக்குச் சென்றேன்*
*அசுத்தம் கண்டேன்.*
*ஆற்றுக்குச் சென்றேன்*
*கழிவுநீர் கண்டேன்.*
*இமயம் சென்றேன் உருகும்*
*பனிநீர் கண்டேன்.*
*ஈயைக் கண்டேன் அதில்*
*பல நோயைக் கண்டேன்.*
*உலகைச் சுற்றினேன்*
*பண்பாட்டுகலப்பினைக் கண்டேன்.*
*ஊருக்கு வந்தேன் பிளாஸ்டிக்*
*எமனைக் கண்டேன்.*
*எனக்குள் பல வியத்தகு*
*மாற்றம் கண்டேன்.*
*ஏழையைக் கண்டேன் அவன்*
*ஏக்கம் உணர்ந்தேன்.*
*ஐயம்கொண்டேன்*
*சுற்றுச்சூழல் கண்டு.*
*ஒற்றுமைகொண்டால் நமக்கு*
*எதிர்காலம் உண்டு.*
*ஓய்வின்றி உழைத்தால்*
*இயற்கையைக் காக்கலாம்.*

# உழைப்பு

வா. முகேஸ்குமார்,
*முதலாண்டு வேதியியல்*

*"இளமையில் சிந்தும்*
*ஒவ்வொரு துளி வியர்வையும்*
*முதுமையில் வடிக்கும்*
*ஒவ்வொரு துளி கண்ணீரையும்*
*துடைக்கும் இளைஞனே!*
*இன்றைய உன் உழைப்பு*
*நாளைய உன் உயர்வு."*

# நட்பு

டி. சரண்யா,
*முதலாண்டு நுண்ணுயிரியல்*

*"எழுதும் விரல்களின் ரேகை*
*தேய்ந்தாலும் நீள்கிறது*
*என் ஆயுள்ரேகை - நம் நட்பின்*
*இனிமையை எழுதுகையில்."*

# சகோதரி

சு. பிரவீணா,
*முதலாண்டு வேதியியல்*

*"இமயத்தின்*
*பனித்துளி நீ.*
*ரோஜாவின்*
*புன்னகை நீ.*
*வாழ்வின் மேடு, பள்ளங்களைத்*
*தாண்டவும் கடக்கவும்*
*கற்றுக்கொடுத்த அன்னையின்*
*மறுஉருவம் நீ."*

# மனஅழுத்தம்

டி. தீபிகா,
*முதலாண்டு வேதியியல்*

*"உதிர்ந்த இன்றைய மலருக்காக*
*கண்ணீர் விடுவதைவிட,*
*பூக்கும் நாளைய மலருக்காக*
*தண்ணீர் விடு."*

# மறைந்த தோழி

அபிராமி, சுகிதா,
*முதலாண்டு வேதியியல்*

*"இருட்டறையில்*
*உன் நினைவுகள்.*
*இரத்தத்தின் வழியே*
*என் பயணங்கள்.*
*சட்டென்று நின்றேன்*
*சில நொடிகள்.*
*உன்னைத் தேடின என் விழிகள்*
*என் அருகிலிருந்த நீ என்னுள்*
*சென்றதனை அறியாமல்."*

# தன்னம்பிக்கை

**ச. பிரியங்கா,**

*முதலாண்டு ஆங்கிலம்*

*"மலைகளும் மரங்கள்போலத்தான்*
*ஏறிவிடத் துணிந்தால்.*
*தோல்விகளும் வெற்றிகள்தான்*
*முயற்சிக்க விழைந்தால்.*
*சுமைகளும் சுகம்தான்*
*சுமக்க வலுவிருந்தால்."*

# ஆசிரியர்

**ஏ. கீர்த்தனா**

*முதலாண்டு வேதியியல்*

*"எண்களையும் எழுத்துகளையும்*
*அடையாளம் காட்டி*
*வார்த்தைகளும் வரிகளுக்கும்*
*பொருள் கூறி*
*சிந்தையில் நல்ல*
*எண்ணங்களை வளர்த்து*
*சமுதாயத்தில் நல்ல*
*மனிதர்களாக வாழச்செய்த*
*உத்தமர்களே ஆசிரியர்கள்."*

# அம்மா

**எம். சௌமியா, கே. ரம்யா**

*முதலாண்டு கணினி பயன்பாட்டுத்துறை*
*'இ' பிரிவு*

"தோழிகளிடம் பிரிவினைச்
சந்தித்தோம்.
உடன்பிறந்தோரிடம் துரோகத்தைச்
சந்தித்தோம்.
மணவாழ்வில் ஏமாற்றத்தைச்
சந்தித்தோம்.
அன்னையிடம் கற்ற அன்பால்
அனைத்து வலிகளையும்
அன்றே மறந்தோம்."

# வெற்றி

**த. தங்கதுரை,**

*முதலாண்டு நுண்ணுயிரியல்*

"ஏன் தோல்வியைக்
கண்டு அஞ்சுகிறாய்?
வலிக்குப் பின்தான்
வெற்றி கிடைக்கும்.
உன் தாயிடம் கேள் -
குழந்தையெனும் வெற்றிக்
கனியைப் பெற்றெடுக்க
அவளடைந்த வலியை."

# மீரா

வசனகவிதை தந்த பாரதிக்குப் பின்னர் புதுக் கவிதையின் தந்தையாய்த் திகழ்ந்த ந. பிச்சமூர்த்திக்குப் பின்னர் கவிதையின் காலம் முடிந்தேவிட்டது என்று கணித்தவர்களின் வாக்குப் பொய்க்க, நவகவிகளுக்கு நிலைபேறு மிக்க வாழ்வு கொடுத்த கவிஞர்களின் கவிஞர் மீரா. திராவிடச் சிந்தனையில் அரும்பிப் பொதுவுடமைத் தத்துவத்தில் பூத்துக் குலுங்கிய கவிதை நந்தவனம்; 10.10.1938இல் தோன்றி 01.09.2002இல் மறைந்த சிவகங்கைச் சீமையின் கவிதைக் குயில் மீ. ராஜேந்திரன்.

கவிஞர் மீ. ராசேந்திரனின் முதல் இரு எழுத்துக்களின் இணைப்பிலிருந்துதான் கவிஞர் மீரா என்னும் புனைபெயர் பிறந்தது.

“மாதா, பிதா, குரு, தெய்வம் என்பார்கள். இலக்குமி அம்மாவும், எஸ். மீனாட்சிசுந்தரமும் என் மாதா பிதாக்கள். புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் என் குரு. மகாகவி பாரதி என் தெய்வம். என் குருவின் மூலமே என் தெய்வத்தைத் தரிசித்தேன். பாரதிதாசனின் தாசன் ஆன நான், மற்றும் ஒரு பாரதிதாசனானேன்” என்று குறிப்பிடும் மீரா, எழுத்துக்கும் வாழ்வுக்கும் இடையில் எந்தத் தடையுமின்றி குறிக்கோளுடன் வாழ்ந்து சிறந்தவர். அண்ணா, பாரதிதாசன், கண்ணதாசன், மு.வ. ஆகியோர் எழுத்துகளில் ஏற்பட்ட ஈர்ப்பால் எழுத வந்த மீரா தொடக்கத்தில் மரபுக் கவிதைகள் எழுதியனார்.

“சாகாத வானம் நாம்.
வாழ்வைப் பாடும்
சங்கீதப் பறவை நாம்.
பெருமை வற்றிப்
போகாத நெடுங்கடல் நாம்.
நிமிர்ந்து நிற்கும்
பொதியம் நாம். இமயம் நாம்.
காலத்தீயில்
வேகாத பொசுங்காத
தத்துவம் நாம்.
வெங்கதிர்நாம். திங்கள் நாம்.
அறிவை மாய்க்கும்
ஆகாத பழமையினை
அகற்றிப் பாயும் அழியாத
காவிரியும் கங்கையும் நாம்”

என்ற மீராவின் இப்பாடல், அக்காலத்தில் திராவிட இயக்க மேடைகளில் பாரதிதாசன் பாடல்களுக்கு அடுத்ததாக ஒலித்தது.

"தெய்வங்கள் திருநாட்கள் எங்கட்கில்லை
தெருவோரச் சாக்கடைக்கு வருமா தெப்பம்?"

என்ற மீராவின் கவிதை அண்ணாவை ஈர்த்தது. மதுரை தியாகராசர் கல்லூரியில் தமிழ்ப் பயின்ற கவிஞர் மீரா, சிவகங்கை மன்னர் கல்லூரியில் பேராசிரியராகப் பணியேற்றார்.அக்காலத்தில் மதுரைப் பல்கலைக் கழகக்கல்லூரி ஆசிரியர் களின் சிக்கல்களைத் தீர்ப்பதற்குத் தொடங்கப்பட்ட மூட்டா (MUTA) இயக்கத்தில் தீவிரப் பங்காற்றினார். அவ்வமைப்பின் ஜர்னல் ஆசிரிய ரானார். போராட்டத் தீவிரத்தால், கல்லூரியினரால் இருமுறை பணி நீக்கம் செய்யப் பட்டார். அதுசமயம் உருவானதே அன்னம் பதிப்பகம். அதன் வழியாக, நவீன படைப்பிலக்கியங்களை உருவாக்கித் தமிழுலகுக்குத் தந்தார். அபியின் 'மௌனத்தின் நாவுகள்' என்ற தொகுப்பை அடுத்து, நீலமணி, கல்யாண்ஜி, இரா. மீனாட்சி உள்ளிட்டோர் கவிதைகளை, நவகவி என வரிசைகளாக்கி வழங்கினார். கி.ரா.வின் படைப்புகளை வெளியிட்டுப் பெருங்கவனிப்பை ஏற்படுத்தியது அன்னம். பின்னர், 'அன்னம் விடு தூது', 'கவி' என்ற கவிதைக்கான சிற்றேடு ஆகியவற்றையும் அன்னம் வாயிலாக மீரா வெளியிட்டார்.

மொழிபெயர்ப்பு, இலக்கிய விமர்சனம், படைப்பிலக்கியம் என தமிழின் துறைதோறும் பதிப்பு களை வலுப்படுத்தித் தேர்ந்த பதிப்பகராகத் தம்மை நிலை நிறுத்திக் கொண்டார். தரமான இலக்கியக் கூட்டங்களை ஏற்பாடு செய்து இனிது நடத்தினார். அவற்றுள் மிகவும் குறிப்பிடத் தக்கது சிவகங்கையில் அவர் மூன்று நாள்கள் நடத்திய 'பாரதி நூற்றாண்டு விழா'.

பதிப்பகத்துறையில் எழுத்துப் பரம்பரையை உருவாக்கி வளர்த்த அவர், தம் கல்லூரிப் பணியிலும் சிறப்பான மாணவர்களை உருவாக்கினார். எந்தக் கல்லூரி நிர்வாகத்தை எதிர்த்துத் தெருவில் இறங்கிப் போராடினாரோ, அந்தக் கல்லூரியிலேயே பின்னர் தமிழ்த்துறைத் தலைமைப்

பொறுப்பையும், பொறுப்பு முதல்வர் பணியையும் அவர் ஆற்ற நேர்ந்தது. அதுசமயம் கல்லூரி நிர்வாகத்தச் சீர்செய்து மாணவர்களிடையே ஒழுக்கக் கட்டுப்பாடுகளை வலியுறுத்திய அவர், அவ்வூரின் பெரிய மனிதர் ஒருவரது பிள்ளையின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்ததன் விளைவாக, கும்பகோணம் அரசுக் கல்லூரிக்குப் பணிமாற்றம் செய்யப்பட்டார்.

***"கல்லூரிப் பணி, தமிழ்த் துறைத் தலைவர் பணி, முதல்வர் பொறுப்புப் பணி, கல்லூரிப் போராட்டப் பணி, கல்லூரி ஆசிரியர்கள் தொழிற்சங்கப் பணி, 'கவி' இதழ்ப்பணி, 'அன்னம் விடு தூது' இதழ்ப் பணி, அன்னம் பதிப்பகச் சிறப்பாசிரியர் பணி, அகரம் அச்சு மேற்பார்வைப் பணி, கொஞ்சம் குடும்பப் பணி இவை எல்லாம் சேர்ந்து என் எழுத்துப் பணியை வளைத்துப் பிடித்துக் கட்டிப் போட்டுவிட்டன"*** என்று தாம் பணிகளால் பிணிக்கப்பட்டும் கவிப் பறவையானதைக் குறிப்பிடும் மீரா, அவற்றையும் மீறித் தமிழுக்குச் சிறப்பான ஆக்கங்களை அளித்துள்ளார்.

இவர் எழுதிய 'கனவுகள்+ கற்பனைகள் = காகிதங்கள்' என்ற கவிதைத் தொகுப்பு அக்காலத்தில் கல்லூரிக் காதலர்களின் வேதப் புத்தகமாகத் திகழ்ந்தது. இவர்தம் இலக்கிய, இலட்சியக் கவிதைகளின் ஆவணமாகத் திகழ்ந்தவை, 'மூன்றும் ஆறும்' (கவியரங்கக் கவிதைத் தொகுப்பு) என்பதும் ஊழல் அரசியலையும் நாணயமற்ற வாழ்வின் போக்குகளையும் அங்கதமாகக் குத்திக் காட்டும் கவிதைக்கூர் முனைகளான் 'ஊசிகள்' (கவிதைத்தொகுப்பும்) என்பதுமாகும்.

ஹைகூவும் சென்ரியூவும் தமிழுலகில் இறக்குமதியான காலத்தில் தமிழ் மரபில் இவரிடமிருந்து ஒலித்தது குக்கூ.

"அழுக்கைத் தின்னும்
மீனைத் தின்னும்
கொக்கைத் தின்னும்
மனிதனைத் தின்னும்
பசி!"

என்பது அவர்தம் குக்கூக் கவிதைகளுள் ஒன்று. இராசேந்திரன் கவிதைகள்,

மீராவின் கவிதைதள், கோடையும் வசந்தமும் ஆகியன இவர்தம் பிற கவிதைத் தொகுப்புகள். 'எதிர்காலத் தமிழ்க்கவிதை' கவிதை விமர்சன நூல். 'வா இந்தப்பக்கம்' நிகழ்காலச் சமுதாய நிகழ்வுகளை அங்கதமாக விமர்சிக்கும் கட்டுரைத் தொகுப்பு.

எளிமையும் அன்பும் தோழமையும் நிறைந்த புன்சிரிப்புக் கவிஞர் மீரா, எழுத்திலும் பேச்சிலும் பொங்கிப் பெருகும் அங்கதம் இவர்தம் உயிர்த் துடிப்பு. நிறைவுக் காலத்தில் 'ஓம்சக்தி' இதழின் ஆசிரியராகச் சிறிது காலம் கோவையில் தங்கிப் பணியாற்றிய மீரா, 'பார்க்கின்சன்' நோயால் பாதிக்கப்பட்டார்.

***"பாரியின் பறம்பை மூவேந்தர்கள் முற்றுகையிட்டது போல் நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக நீரிழிவு, இதய நோய், வாத நோய் ஆகிய முந்நோய்களால் தாக்கப்பட்டுப் படுக்கையில் கிடக்கிறேன். இப்போதாவது கடவுளைக் கும்பிடுங்கள், கோயி லுக்குப் போங்கள்... என்று நெய்வேலி யிலிருந்து வரும் போதெல்லாம் என் மகள் செல்மா சொல்லியும் எதுவும் நடக்கவில்லை. என்னால் முடியவில்லை. கடவுள் இருந்து காப்பாற்றினால் நல்லது தான். (நான் பிழைத்துப் போகிறேன்). ஆனால், இயல்பாய் எனக்கு அந்த நம்பிக்கை வரவில்லை. இனிச் சாகப் போகும்போதா வரப்போகிறது? திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கொடுத்த 'பெரியார் விருது' என் படுக்கை அருகே இருக்கிறது"*** என்று அச்சூழலிலும் அங்கதத்தோடு தன் நிலையை எழுதினார் மீரா.

தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு, பாவேந்தர் விருது, சிற்பி இலக்கிய விருது, தமிழ்ச் சான்றோர் பேரவை விருது மற்றும் அப்துல் ரகுமான் வழங்கிய கவிக்கோ விருதும், கவிஞர் சிற்பி அறக்கட்டளை வழங்கிய வாழ்நாள் சாதனையாளர் விருதும் இவருக்குப் பெருமை சேர்த்தன. இவர்தம் பதிப்புப்பணியால் மிகச்சிறந்த விருதுகள் பெற்ற படைப்பாளிகளை உருவாக்கிய படைப்பாளி கவிஞர் மீரா.

## கல்லூரி

பி. சரண்யா,
*முதலாண்டு ஆங்கிலம்*

*"அறிவில் சிறந்த மானிடராக*
*ஆக்கும் கல்லூரி எங்கள் கல்லூரி.*
*இல்லாதவர்க்கும் கல்வியினை*
*ஈயும் கல்லூரி எங்கள் கல்லூரி.*
*உயர்ந்து வர முனைவோர்க்கு*
*ஊக்கமளிக்கும் கல்லூரி.*
*என்றும் எப்போதும் மிகுந்த*
*ஏற்றமுடன் விளங்கும் கல்லூரி.*
*ஒழுக்கத்துடன் வாழவும்*
*ஓங்குபுகழ் பெறவும் உதவும் கல்லூரி.*
*ஔவையின் நீதியை நல்கும் கல்லூரி.*

## சகோதரி

டி. பவித்ரா,
*முதலாண்டு கணினி பயன்பாட்டுத்துறை*
*'இ' பிரிவு*

"ஒரே கருவறையில் பிறந்தோம்.
ஒன்றாய் வளர்ந்தோம்.
ஒற்றுமையை உணர்ந்தோம்.
வாழமுற்படும் முன் நீ மட்டும்
பிரிவைப் பின்பற்றியதேன்?"

## முயற்சி

எஸ். கார்த்திகேயன்,
*முதலாண்டு வேதியியல்*

*"மூச்சு நின்றால்தான்*
*இறப்பு அல்ல;*
*முயற்சி நின்றாலும்*
*இறப்புத்தான்.*
*பாதை மறந்துவிட்டது என்று*
*நின்றுவிடாதே நீ*
*செல்லும் திசைகூடச்*
*சரியான பாதையாகும்.*
*தோல்வியைக் கண்டு கலங்காதே!*
*முயன்றால் இன்றைய தோல்வியும்*
*நாளைய வெற்றியாகும்."*

## My Dear Mother

S. Sakthi Vel
I st B.Sc. Physics

"I searched through books.
And I leafed through cards.
For the words that would convey
what I had in my heart.
But when I sat down to write
all I could write was
'I can't be without you.'

# முயற்சி

**கு. காயத்ரி,**
*முதலாண்டு வேதியியல்*

*"கட்டாந்தரையிலும்*
*கனிமச் சுரங்கம் காத்திருக்கும்*
*கேள்விகளுக்குள்*
*பதில்கள் ஒளிந்திருக்கும்.*
*தேல்விகளின் முடிவில்*
*வெற்றி காத்திருக்கும்.*
*வலிகள் இல்லாது*
*வலிமை இல்லை.*
*பயணம் இல்லாது*
*பாதையில்லை.*
*நீ துயரங்களைக் கடந்தது*
*சிகரங்களைத்தொடத்தான்.*
*தனிமலையாய் இருந்தாலும் நீ*
*எரிமலையாய் இருந்திடு.*
*வெற்றி மட்டுமே உச்சம்*
*மற்றவையெல்லாம் துச்சம்.*
*முயன்றால் முன்னேறலாம்!*

# சாதிவேறுபாடு

**வி. நவீன் ராஜு,**
*இரண்டாமாண்டு உயிர்வேதியியல்*

"சாதியைக் காரணம்காட்டி
ஒதுக்கிவைத்தாய் பள்ளியில்.
இன்று உயர்ந்துவிட்டேன்
உன்னைவிடக் கல்வியில்."

# வெற்றி

**வி. கவிதா,**
*முதலாண்டு நுண்ணுயிரியல்*

"என் விழிகளிலிருந்து
நீ விலகிவிடக் கூடாதென
இமைக்காமல் இருந்தேன்
என் இமைகளை - ஆனாலும்,
விழி கடந்து செல்கின்றாய்க்
கண்ணீரைப்போல நீ."

# மனப்பூந்தோட்டம்

**எ. பிரியா,**
*முதலாண்டு நுண்ணுயிரியல்*

"நீ என் நட்பை விட்டுப் பிரிவதாய்
என் நெஞ்சில் தீயை
ஊற்றிச் சென்ற அக்கணத்திலிருந்து
சாம்பல் பூத்த
வனமாக மாறியது என்
மனப்பூந்தோட்டம்."

# மரம் சொல்கின்றது

**எஸ். சுகன்யா, ஜெ. கீர்த்தனா,**
*முதலாண்டு நுண்ணுயிரியல்*

"அன்று நான் சிரித்தேன் -
வானம் அழுதது.
இன்று வானம் சிரிக்கிறது -
நான் வாடுகிறேன்."

# முதியோர் இல்லம்

**வி.ஜி. தனலட்சுமி,**
*முதலாண்டு ஆங்கில இலக்கியம்*

"கோபுரங்கள் இல்லை.
கட்டணங்கள் இல்லை.
அபிஷேகம் இல்லை.
ஆராதனை இல்லை.
அர்ச்சகர் இல்லை.
சிலைகள் இல்லை.
காவலர்கள் இல்லை.
தடுப்புச் சுவர்கள் இல்லை.
எவ்வித பாதுகாப்பும் இல்லை.
வரங்களை வாரி வழங்கிய
எண்ணற்ற தெய்வங்கள்
சாபங்களைச் சுமந்தபடி
வாடிக்கிடக்கின்றன -
முதியோர் இல்லத்தில்."

# தமிழ்மொழி

**ப. கலையரசன்,**
*முதலாண்டு நுண்ணுயிரியல்*

"தடுக்கி விழுந்தால் அ...ஆ...
சிரிக்கும் போது இ...ஈ...
அதட்டும் போது எ...ஏ...
வியப்பின் போது ஒ...ஓ...
மற்ற நேரங்களில் மட்டும்
வேற்றுமொழி பேசுகிறாயே
தமிழை மறந்த தமிழா!"

# கல்வி

**எஸ். தேன்மொழி,**
*இரண்டாமாண்டு நுண்ணுயிரியல்*

"விதை விதைக்க
வேண்டிய கல்வி
விலைக்குக் கேட்கப்படும்
பெருவியாபாரம்!
திறமை வெளிக்காட்ட
வேண்டிய கல்வி
வறுமைக்குத் தள்ளப்படும்
அந்தோ பரிதாபம்!
காசுக்குப் பறிபோன
பட்டக்கல்வி!
மனத்தைக் கலங்க வைக்கும்
பெருங்கேள்வி!"

# தாய்

**கே. மணிகண்டன்,**
*இரண்டாமாண்டு துகிலியல் மற்றும்*
*ஆடைவடிவமைப்புத்துறை*

"கண்ணுக்குள் அவள் உருவம்.
அவள் மடியில் எனக்கு இடம்.
அவள் அரவணைப்பில் என்னுடல்.
என்னைச் சிரிக்க வைக்க
அவள் செய்யும் சேட்டைகள்.
இப்படி ஓர் அன்பை, ஆதரவை
எங்கேயும் நான் கண்டதில்லை."

*புதுக்கவிதை முன்னோடிகள் - 03*

# மு. மேத்தா

மு. மேத்தா (முகமது மேத்தா செப்டம்பர் 5, 1945 இல் பெரியகுளத்தில் பிறந்தார். இவர் சென்னை மாநிலக்கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். புதுக்கவிதைக்கு ஏற்றம் தந்த கவிஞர்களுள் இவரும் ஒருவராவார்.

உவமை உருவகங்களில் பழமையையும் புதுமையையும் இணைத்த மு.மேத்தா, வளமான கற்பனை, எளிய நடை, எளிய சொல்லாட்சி, மனித உணர்வுகளின் படப்பிடிப்புகளால் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தவர். இவரைப் பின்பற்றி இளைஞர்கள் பலர் கவிதை எழுத ஆர்வம் கொண்டனர்.

காதல் சோகமும், தமிழ்த் தாகமும் இழையோடும் அவரது கவிதைகள் அவ்வப்போது கூர்மையான சமூக விமர்சனங்களிலும் இறங்குவதுண்டு. சமூக விமர்சனத் தொனியில் அமைந்த 'தேச பிதாவுக்கு ஒரு தெருப் பாடகனின் அஞ்சலி' என்ற கவிதைத் தொகுப்பு இவருக்குப் புகழ் தேடித் தந்ததாகும்.

***'நான் வெட்ட வெட்டத் தழைப்பேன்***
***இறப்பினில் கண் விழிப்பேன்***
***மரங்களில் நான் ஏழை***
***எனக்கு வைத்த பெயர் வாழை'***

போன்ற வரிகள் இவர்தம் கவிப் போக்கினைக் காட்டும்.

'வானம்பாடி' என்ற புதுக்கவிதை ஏட்டின் வாயிலாக அறிமுகம் ஆன கவிஞர்களுள் மு.மேத்தா முன்னணியில் நிற்பவர்.

மரபுக்கவிதைகள், புதுக் கவிதைகள், சிறுகதை, நாவல், கட்டுரைகள் முதலியவற்றைப் படைப்பதிலும் வல்லவரான மு. மேத்தா அத்துறைகளில் பதினைந்திற்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். அவருடைய நூல்களுள் 'ஊர்வலம்' தமிழக அரசின் முதற்பரிசினைப் பெற்ற கவிதைத்தொகுப்பு நூலாகும். இவரது 'சோழ நிலா' என்னும் வரலாற்று நாவல் 'ஆனந்த விகடன்' இதழ் நிகழ்த்திய பொன்விழா இலக்கியப் போட்டியில் முதல் பரிசு பெற்றது.

இவர் திரைப்படத் துறையிலும் கவனம் செலுத்தி வருகின்றார்.

### மு. மேத்தாவின் ஒரு கவிதை

“இடிந்து கிடக்கின்றன மசூதிகள்...
இடிபாடுகளின் உள்ளிருந்து
எட்டிப் பார்க்கிறார்.
இறைவன்...

எரிந்து கிடக்கின்றன தேவாலயங்கள்
சாம்பல் குவியலில்
மெல்ல அசைகிறது
கர்த்தரின் தலை.

காயம்பட்டுக் கிடக்கின்றன
கோவில்கள்
காதுகளைப் பொத்தியபடி
கடவுள்.

வேடிக்கை பார்த்துக்
கொண்டிருக்கும்
கூட்டத்தை நோக்கி
மூவரும் எழுப்புகின்றனர்
ஒரு கேள்வி.

‘உங்களில் யாராவது
ஒரு மனிதன் இருந்தால்
வரச் சொல்லுங்கள்
ஒன்றாக நாங்கள்
உயிர்த்தெழுகிறோம்’ ”

(ஆகாயத்துக்கு அடுத்த வீடு.ப.31)

## தன்னம்பிக்கை

**ஆர். மோகன்**
*முதலாண்டு வேதியியல்*

“தன்னம்பிக்கை என்பது
‘ஏழெழுத்து ஒரு வார்த்தை’
என்று நினைத்துப் படித்தால்
எப்படி உனக்கு அது வரும்?
அது உழைப்பின் விதை - அதை
உன் உள்ளத்தில் புதை.”

## தோழி

**மு. கஸ்தூரி**
*முதலாண்டு வேதியியல்*

“சோதனைகளில் சாதனை படைக்கச்
சொல்லிக் கொடுப்பாய்.
வேதனை இருளை வெற்றிகொள்ள
வெளிச்சம் கொடுப்பாய்.
வெற்றியின்போது வாழ்த்துச் சொல்லி
விலகி நிற்பாய்.
தோற்கும்போது தோள்கொடுப்பாய்
நெருங்கி நின்று.”

# விடியல்

**மு. விவேக்குமார்**
*வணிகவியல் (கணினி) ஆ பிரிவு*

“இருவேளை விரதம்.
அடுப்பெரியாத வீடு.
வறுமையின் செழிப்பில் தாடி.
உணவாய் மாறிய குடிநீர்.
ஆனாலும்,
நம்பிக்கையோடும்
உறுதியோடும்
காத்திருக்கிறேன் -
நாளைய விடியலுக்காக.”

# அன்பு

**ஜெ. இந்துமதி**
*இரண்டாமாண்டு ஆங்கில இலக்கியம்*

“எதிர்பார்ப்பில்லாத வாழ்வில்
நான் எதிர்பார்ப்பது அன்பு.
எதிர்பார்ப்புகள் குறைந்தால்
ஏமாற்றங்கள் குறையும்.
ஏமாற்றங்கள் குறைந்தால்
ஏக்கங்கள் குறையும்.
ஏக்கங்கள் குறைந்தால்
ஏற்றத்தாழ்வுகள் குறையும்.
இவையனைத்தும் குறைந்தால்
அன்பு அதிகமாகும்.”

# ஊழல்

**கு. காயத்ரி**
*முதலாண்டு வேதியியல்*

“நான் நாளை வேலைதேடிப்
போகும்போதுதான் தெரியும் -
நான் படித்த கலித்தொகையும்
குறுந்தொகையும் போதாது
‘பெருந்தொகை’ வேண்டுமென்று.”

# நம்பிக்கை

**எம். மகேஸ்வரி**
*முதலாண்டு வேதியியல்*

“உன் மீது உனக்கு
நம்பிக்கை இல்லை என்றால்
கடவுளே வந்தாலும்
உன்னைக் காப்பாற்ற முடியாது.
உன் மீது உனக்கு
நம்பிக்கை வந்துவிட்டால்
உனக்குக் கடவுளே
தேவையில்லை.”

# சிந்தனை

**எஸ். சுரேகா**

*முதலாண்டு வேதியியல்*

"எடுத்தாள் பேனாவை
எழுதமுடியவில்லை.
படிக்க எடுத்தாள் புத்தகத்தை
படிக்க முடியவில்லை.
இதை இரண்டையும் செய்தாள்
ஒன்றும் முடியவில்லை.
சிந்திக்க ஆரம்பித்தாள்
உலகையே ஆளமுடிந்தது."

# உழவன்

**எஸ். நித்ய கௌசல்யா**

*முதலாண்டு உயிர்வேதியியல்*

"மழை வேண்டி
வானம் பார்த்த பூமிபோலப்
பயிர்களை எதிர்பார்த்த உழவன்
வேண்டினான் இறைவனிடம்.

தேர்வு முடிவை எதிர்நோக்கும்
மாணவரைப்போலக்
காத்திருந்தான்
அறுவடைக்கு அந்த உழவன்.

பிறந்தது திருப்பம்!
நிறைவேறியது விருப்பம்!
உழவனின் உடலும் மனமும்
குளிர நிலத்தில் விழுந்தது மழை.

உழைத்தான் உழவன்
வியர்வையில் குளித்தபடி.
அவன் வாழ்வை உயர்த்த
வளர்ந்தது பயிர் வரப்பை மீறி.

அவன் அறுவடை செய்தது
பயிரை மட்டுமல்ல தன்
மகிழ்ச்சியையும் நல்ல
எதிர்காலத்தையும்.

***அறிவிப்பு***

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

வருகின்ற ஜூலை மாதம் 21 ஆம்நாள் கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) யின் தமிழ்த்துறையும் திருவையாறு தமிழ் ஐயாக் கல்விக் கழகமும் இணைந்து 'அனைத்துலகக் காப்பியத் தமிழ் என்ற பொருண்மை'யில் பன்னாட்டுக் கருத்தரங்கினை நடத்த உள்ளன.

இக்கருத்தரங்கில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் பின்வரும் தொலைப்பேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்கள் :

***முனைவர் மா. கார்த்திகேயன்***
9894953535

***முனைவர் மு. கலைவேந்தன்***
9486742503

*சங்கச் சாரல் - 02*

# நெருஞ்சி மலர்

பூக்கள் மென்மையின் இருப்பிடம். எனவேதான் மென்மையான குணங்களையுடைய பெண்மையைப் பூவுடன் ஒப்பிடுவர். பூவை வளர்ச்சி நிலையில் பார்க்கும்போது, அதனுள் நாம் பெறவேண்டிய கருத்துகள் பல உள்ளன.

பூவின் வளர்ச்சியில் அது காயாகவும், கனியாகவும் மாறவேண்டும். மென்மையின் குணங்கள் அவ்வாறே மென்மையாகவே இருந்துவிடுதல் கூடாது. அதனுள் காய் போன்ற உறுதித் தன்மையும் வேண்டும். கனிபோன்று சுவை பயக்கும் இனிமையும் வேண்டும். பூக்களின் இவ்வியல்பை உலக மாந்தர்கள் யாவரும் அறிந்து கற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று.

உலகில் சில மனிதர்களிடம் பூப்போன்ற மென்மையான குணங்களைப் பார்க்க முடியும். அவர்களின் மென்மைத் தன்மையால் பலர் கவரப்படுவர். மென்மையின் குணங்களை உடைய அவர்களே பின்னர் மாற்றமடைந்து துன்பம் செய்வதையும் காணமுடிகின்றது. இவ்வாறான மனிதர்களுக்கு எதனை ஒப்பிட முடியும்? சங்க இலக்கியம் இவ்வாறான மனிதர்களுக்கு நெருஞ்சி மலரை ஒப்புமையாகக் கூறுகின்றது.

***"நோம் என்நெஞ்சே! நோம் என்நெஞ்சே!***
***புன்புலத்து அமன்ற சிறியிலை நெருஞ்சிக்***
***கட்கு இன் புதுமலர் முட்பயந்தாஅங்கு***
***இனிய செய்த நம் காதலர்***
***இன்னா செய்தல் நோம் என்நெஞ்சே!"***

*(குறுந்தொகை - 202)*

மென்மைத் தன்மையாய் இருந்து பின்னர் தீமை பயக்கும் இக்குணம் உடையவர்களின் இயல்புகளை இப்பாடல் நெருஞ்சி மலருடன் ஒப்பிட்டு நுட்பமாக விளக்குகிறது. இவர்கள் தானே முன்வந்து நன்மை செய்பவர்கள் போல் தோன்றுவர். அதாவது நெருஞ்சி மலரைத் தோற்றுவிப்பதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டாம். இது உழப்படாத பாழ்நிலத்தில் தானே தோன்றும் இயல்புடையது. சிறிது காலம் சிறிய இலைகளுடன் தோன்றிப் பின்னர் பூக்கும் இயல்புடையது. நெருஞ்சி மலர் போன்ற மனிதர்களை இதன் அடிப்படையில் அடையாளம் காணலாம். இதனையே இப்பாடல், "புன் புலத்து அமன்ற சிறியிலை நெருஞ்சி" என்று கூறுகின்றது. வாழ்வில் நிகழும் இவ்வாறான ஏமாற்றங்களுக்கு நெருஞ்சி மலர்

போன்ற மனிதர்களை மட்டுமே காரணம் கூறிவிட முடியாது. அவ்வாறான மனிதர்களைச் சரியாக மதிப்பிடத் தெரியாது நல்லவர்களே என மேலோட்டமாக நம்பி ஏமாந்துபோகும் நபர்கள், அம்மலரைக கண்ணால் மட்டுமே கண்டு இன்பம் அடைந்து அதனை மென்மை என்று நினைக்கின்றனர். கண்ணால் மட்டுமே பார்த்தால் போதாது. அவர்களைக் கருத்தால் பார்க்க வேண்டும். ஏமாற்றமடையும் இவர்களிடம் உள்ள இக்குறையை இப்பாடல் “கட்டு இன் புதுமலர்” என்று குறிப்பிட்டுள்ளது.

கண்ணால் மட்டுமே கண்டு உண்மையென அறிந்த தவற்றிற்குப் பலனாகப் பிற புலன்களும் துன்பம் அடைய வேண்டிய சூழல் வரும். இந்தக் கருத்தை விளக்குவதற்கே இப்பாடல் முள்ளைத் தரும் பல மலர்கள் இருக்க அவற்றை எல்லாம் விடுத்து நெருஞ்சி மலரைக் குறிப்பிட்டுள்ளது. அதாவது பூவாய் இருந்து முள்ளாய் மாறும் நெருஞ்சியில் பொதுவாக ஐந்து முட்கள் இருக்கும். ஐந்து முள் என்பது ஐம்புலனுக்கும் துன்பம் விளையும் என்பதையேக் குறிக்கின்றது.

இதனால் கண்போன போக்கில் சென்று துன்பம் அடையக் கூடாது என்ற கருத்தைச் சங்க இலக்கியம் நெருஞ்சி மலரின் வழி எடுத்துரைப்பது சிறப்புக் குரியதாகிறது.

*சாரலில் மீண்டும் நனைவோம்...*

*முனைவர் த. கண்ணன்*

தமிழ் விரிவுரையாளர்

## *கல்லூரிநிறுவனர் தினக் கொண்டாட் டத்தின்போது தாளாளரை வாழ்த்தி வாசிக்கப்பட்ட கவிதை*

“இதயமெனும் கோட்டையில்
அன்பெனும் மலர்சூடி-மற்றவர்
மனதில் இன்பத்தையளிக்கும்
ஞானதான வள்ளல் கே.எஸ்.ஆர்
ஐயா புகழ்பாட
வசந்த வேளையில் வாழ்த்து
மாலை சூட
சொல்மாலையோடு
தமிழன்னை தவழ்ந்து விளையாட
கல்வித்திருமகன் புகழ்பாட-
கே.எஸ்.ஆர் பல்கலைக் கழகம்
உருவாக...
பாமாலை பொழியும் கவிமழை
நேரம்
கல்விதந்தைக்கும்
அடியேனின் அன்பு வணக்கம்!

அந்த நாள் முதல்
இந்த நாள் வரை

நம் கல்வித்தந்தை கே.எஸ்.ஆர்
ஐயாவுக்கு
மறக்க முடியாத நாள்
இந்நாள்.
தாயின் கருவறையிலிருந்து
பூமித்தாய் கருவறையின்
திருவறைக்கு வந்த
திருநாள்-இதை நாம்
மறத்தல் தகுமோ?.

கருவேப்பம் பட்டி கண்டெடுத்த
கல்விச் சிலை
சென்னிமலை பச்சியம்மாள் சேர்ந்து
செதுக்கிய சிற்பம்
ஞாயிறுக்கும் வயதுண்டு நல்மதிக்கும்
தேயுண்டு
காற்றும் கரைகடக்கும் கடல்மணலும்
கரைந்து போகும்
கண்ணீரில் உப்புண்டு கவின் மலரில்
தேனுண்டு.

மறையாத ஞாயிறாய்
தேயாத மதியாய்
திகட்டாத அமுதாய்
கரையாத உருவாய்
பிறக்கும் போது குழந்தையாய்
வளரும் போது உழைப்பாளியாய்
திருமணத்தின் போது இதயக்கனியாய்
இன்று தாய், தந்தையாகிய
தாயுமானவரே!

நம் கே.எஸ்.ஆர் ஐயா அவர்கள்
கல்விக்குக் கலங்கரை விளக்கமாய்
கலைமகளோடு கைகோர்த்து
நிற்கின்றார்.
திருச்செங்கோடு என்றால்
அர்த்தநாரீ-அது அந்தக் காலம்
கே.எஸ்.ஆர் என்றால்
திருச்செங்கோடு -இது இந்தக்
காலம்.
அன்று ஆவின் பாலை அமுதாய்
ஊற்றினீர்-இன்று
ஞானப்பாலை அனைவருக்கும்
புகட்டுகின்றீர்!
வாங்கிய பட்டங்கள் வாசித்து
மாலாது-நீங்கள்
வரலாறு பேசும் பெருங்காவியம்.
நாளும் நல்லதை எண்ணி
வாழ்பவரே!
நானிலம் செழிக்க வந்த
நல்முத்தே1
நாடுபோற்றும் விலை மதிக்க
முடியாத எங்கள் கல்வித்தந்தை
சொத்தே! கேட்டதையெல்லாம்
கொடுக்கும் கற்பகக் கனியே!

கை உயர்த்தி கேட்போர்க்கெல்லாம்
கரம் தாழ்த்தி கொடுக்கும்
கருணைக்கடலே.
தென்றலுங்கள் தேனிலவு
காலங்களை வீணை மீட்டும்
பச்சை பசுஞ்சோலைகள்-உங்கள்
பார்வைக்குத் தவம் கிடக்கும்

பைந்தமிழும் பசுமை பாடும்
பல்கலைக்கழகம் நீர்!
கரும்பலகைக்குக் கண்ணிருந்தால்-உம்
காவியம் பாடும்.
மேசைக்கு வாயிருந்தால்
மெல்லிசை பாடும்.
சாலையில் கற்கள்
சங்கீத நடனமாடும்.

அழியாத புகழ் உமக்குண்டு-நன்றி
மறவாத நல்லிதயமுண்டு.
தாரத்தைப் புரிந்தீர்-அதனால்
இல்லறத்தில் நல்லறம் கண்டீர்!

சோதனையும் வேதனையும்
பல கண்டீர்! சாதனைகள்
பல நூறு கண்டீர்!

கடல் கடந்து திரவியம்
தேடியது -அந்தக் காலம்
கடல் கடந்து கௌரவம்
வருகுது உங்களுக்கு இந்தக் காலம்
பாரில் வாழும் பல்லோரே
இதற்கு சாட்சி

வாழ்க்கைத் துறையில் பிழைப்பதற்கு
பல வழி-ஆனால்
உமக்கென்றும் தனி வழியாய்க்
கல்வித்துறை அமைத்தீர்!
கலைவிருது பெற்றீர்1
பண்பாளர் பல கொண்டீர்!
பார் புகழும் வெற்றி கண்டீர்!-இனி

கே.எஸ்.ஆர் பல்கலைக்கழகம்
உயரக் காண்பீர்!

நீர் வாழ்ந்த காலத்தில்
தனிமரியாதையு மங்காப்
புகழும் உண்டு உமக்கு.
இனி வருங்காலத்திலும்
புகழுண்டு - அதற்கு நிலையுண்டு.

கலைவாணி அருளாலே
கே.எஸ்.ஆர் ஐயாவுக்கு புகழ்
வெற்றி கூடி வரும் - இனி
ஞானதானவள்ளல் வாழிய வென்றடி
வாழ்த்துவோம்''

**த. மணிகண்டன்,**
மூன்றாமாண்டு தமிழ் இலக்கியம்.

*மார்ச் எட்டாம் நாளை முன்னிட்டு கடந்த இதழினை 'மகளிர்தினச் சிறப்பிதழாக' வெளியிட்டோம்.*

*இந்த இதழினைக் 'கவிதைச் சிறப்பிதழாக' வெளியிடுகின்றோம்.*

*இனி, வருகின்ற ஜூன் மாத விடியல் இதழினைச் 'சுற்றுச்சூழல் சிறப்பிதழாக' வெளியிடத் திட்ட மிட்டுள்ளோம்.*

*மாணாக்கர்கள் சுற்றுச்சூழல் சார்ந்த படைப்புகளைத் தந்து உதவுமாறு வேண்டுகின்றோம்.*

**-ஆசிரியர் குழு**

# செஞ்சிக்கோட்டை

தமிழக வரலாற்றில் செஞ்சிக்கு முதன்மையான இடமுண்டு, கோட்டைகள் எல்லாம் கட்டுவதற்கு முன்னரே கோட்டையுடன் வலிமையாக திகழ்ந்த ஊர் செஞ்சி. மராட்டிய மன்னரான சிவாஜி, "இது இந்தியாவிலுள்ள எவரும் உட்புகமுடியாத கோட்டைகளுள் சிறந்தது" எனக் கூறுமளவுக்கு அரண் செய்யப்பட்ட கோட்டையாக இது இருந்தது. பிரித்தானியர் இதனைக் "கிழக்கின் ட்ரோய்" என்றனர். முகலாயர்களால் 'பாதுஷாபாத்' என்றும் சோழர்களால் 'சிங்கபுரநாடு' என்றும் பெயர்பெற்றது.

இயற்கையோடு ஒன்றிய மூன்று பெரிய மலைகள், இரண்டு சிறிய குன்றுகள் 12 கி.மீ., நீளமுள்ள மதில் சுவர்களால் இணைத்தது செஞ்சிக் கோட்டை. பல போர்களைச் சந்தித்த பின்னரும், இன்றும் கம்பீரமாக காட்சி தருகிறது.

சோழர் காலத்தில் செஞ்சிக்கு பெயர் சிங்கபுரி, சிங்கபுரி கோட்டம் என்பார்கள். அதுவே, பின்னாளில் செஞ்சி ஆகிவிட்டது. இப்பொழுதும் செஞ்சிக்கு அருகே சிங்கவரம் என்ற ஊர் உள்ளது, அது செஞ்சி அந்தக் காலத்தில் பெரிய நிலபரப்பு கொண்ட ஊராக இருந்திருக்கலாம் என்பதற்குச் சான்று.

கோனார் வம்சத்தினர் செஞ்சிக் கோட்டையை, 13ஆம் நூற்றாண்டில் கட்ட துவங்கினர். அடுத்து வந்த பல மன்னர்கள் செஞ்சிக் கோட்டையைப் பலம் பொருந்திய கோட்டையாக மாற்றினர். குறிப்பாக, விஜயநகர மன்னர்களின் ஆளுகையில் செஞ்சிக்கோட்டை இருந்தபோது, 1509ஆம் ஆண்டு முதல் 1529ஆம் ஆண்டு வரை, தொடர்ந்து 20 ஆண்டு கோட்டையை விரிவுபடுத்தினர்.

இந்தக் கோட்டையில் உள்ள கோவில்கள், மண்டபங்கள், குளங்கள், சுனைகள், படைவீரர்கள் தங்கும் பகுதி, நெற் களஞ்சியம், எதிரிகள் கடக்க முடியாத ஆழமான, அகலமான அகழிகள் போன்றவை, தென்னிந்திய மன்னர்களுக்குக் கட்டடக் கலையில் இருந்த தேர்ந்த ஆற்றலை வெளிப் படுத்துகிறன.

செஞ்சியின் வரலாறு பற்றி அதில் கிடைக்கும் கல்வெட்டுக் களின் அடிப்படையில் கி.மு. முதல் கி.பி 6 வரை இங்கு

ஜைனர்கள் வாழ்ந்தமையை அறியமுடிகின்றது.

பல்லவர் காலத்தில் சிங்கபுரதில் (சிங்கவரம்) ஒரு குகைகோவில் கட்டப்பட்டது, செஞ்சி தெற்கே பனமலை பகுதியில் ஒரு கோயில் கட்டப்பட்டது. அதன் பின்னர், மண்டகப்பட்டு என்னுமிடத்தில் ஒரே கல்லில் குடைந்து செய்யப்பட்ட குகை கோயில் உருவாக்கப்பட்டது. இந்த இடம் செஞ்சில் இருந்து பதினேழு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. பல்லவர்களின் ஆளுகைக்கு உட்பட்ட சிங்கவரம் மற்றும் மேலச்சேரி பகுதிகளில் உள்ள பழங்கால கோயிலகளின் முலம் செஞ்சி பல்லவர்களின் ஆளுகையிலிருந்த மையை அறியமுடிகின்றது.



செஞ்சி கிழக்குப் பகுதியில் காணப்படும் ஆனங்கூர் கல்வெட்டுக்களின் படிச் செஞ்சி பல்லவர்களின் காலத்திற்குப் பின் சோழர்கள் ஆண்டமையை அறிய முடிகின்றது. கி.பி. 871 முதல் கி.பி. 907 ஆதித்ய சோழன் ஆட்சி செய்திருகின்றனர். அவன் தம்பி ராஜராஜன் சோழன் (987-1014) காலத்தில் சிங்கபுரம் என்று செஞ்சி அழைக்கப்பட்டுள்ளது.



கி.பி. 1014-1190களின் செஞ்சி பாண்டியர்களின் கட்டுப்பாட்டில் இருந்ததாகக் கல்வெட்டுகள் குறிப் பிடுகின்றன. கி.பி 13ஆம் நூற் றாண்டில் விஜயநகரப் பேரரசுகளின் ஆளுகைக்கு உட்பட்டு இருந்தது. தமிழ் நாட்டில் நாயக்கர்களின் ஆட்சிக்காலத்தில் செஞ்சி நாயக்கர் களின் தலைமையிடமாகவும் விளங்கியது.

மராட்டியர்களிடம் இருந்த இக் கோட்டையைப் பீஜப்பூர் சுல்தானின் படைகள் கைப்பற்றின. இக் கோட்டையைக் கி.பி 1677இல் மீளக் கைப்பற்றிய(மீட்ட) மராட்டிய மன்னர் சிவாஜி இதனை மேலும் பலப்படுத்தினார். ஔரங்கசீப்பின் தக்காணப் படையெடுப்பின் போது மராட்டிய மன்னனாக இருந்த, சிவாஜியின் இரண்டாவது மகனான சத்ரபதி ராஜாராம் தப்பிச் செஞ்சிக் கோட்டைக்கு வந்து அங்கிருந்து முகலாயர்களுடன் போரிட்டார். முகலாயர்கள் இக்கோட்டையைச் சுற்றி முற்றுகை இட்டிருந்தபோதும் ஏழு வருடங்களாக இதனைக் கைப்பற்ற முடியவில்லை. இறுதியில் 1698ஆம் ஆண்டில் இக்கோட்டை கைப் பற்றப்பட்டது. ஆனால், அதற்கு முன்னரே சத்ரபதி ராஜாராம் அங்கிருந்து தப்பி விட்டார். பின்னர், இக்கோட்டை கர்நாடக நவாப்புக்களில் கைக்கு வந்தது. அவர்கள், கி.பி. 1750இல் இதனை பிரெஞ்சுக் காரர்களிடம் இழந்தனர். இறுதியாக கி.பி. 1761இல் பிரித்தானியர் இதனைக் கைப்பற்றிக் கொண்டனர். எனினும் சிறிது காலம் இதனை ஹைதர் அலியும் கைப்பற்றி வைத்திருந்தான்.

செஞ்சிக் கோட்டை மூன்று குன்றுகளையும் அவற்றை இணைக்கும் சுவர்களையும் உள்ளடக்கியது. இவற்றுள் 7 சதுர கிலோமீட்டர்மீட்டர் (800 அடி) உயரத்தில் அமைக்கப்பட்டிருந்த இக் கோட்டை 24 மீட்டர் (80 அடி) அகலமுள்ள அகழியினால் காப்புச் செய்யப்பட்டிருந்தது. இது எட்டு மாடிகளைக் கொண்ட கல்யாண மஹால், தானியக் களஞ்சியம், சிறைச் சாலை, படையினர் பயிற்சிக்கூடம், செஞ்சியம்மன் கோயில் என்பவற்றைக் கொண்டிருந்தது. இந்த அரணுக்குள் ஆனைக்குளம் எனப்படும் புனிதக் குளம் ஒன்றும் இருந்தது. இக் கோட்டைக்கான அரணாக இயற்கையாக அமைந்த கிருஷ்ணகிரி, சக்கிலிதுர்க், ராஜகிரி ஆகிய குன்றுகள் இருந்தன.

இக்கோட்டை இறுதியாகப் பிரித்தானியர் கட்டுப்பாட்டில் வந்த பின்னர் முக்கியமான படை நடவடிக்கைகள் எதுவும் இங்கே நிகழவில்லை. 1921ஆம் ஆண்டில் இது **தேசிய நினைவுச் சின்னம்** என அறிவிக்கப்பட்டு தொல்லியற் துறையின்கீழ் கொண்டுவரப்பட்டது.

***நன்றி*** *: http://ta.wikipedia.org*

தனிச்சுற்றுக்கு மட்டும்



Vidiyal - 36 - April 2012

சன் பிரிண்டர்ஸ் - தி.கோடு, செல்: 97500 20222